# பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான நான்காவது மீளாய்வினை நிறைவுசெய்கின்றது

- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது இலங்கையுடனான 48 மாத கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான நான்காவது மீளாய்வினை நிறைவுசெய்து, இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு சிஎஉ 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 350 மில்லியன்) தொகைக்கான உடனடி அணுகலினை நாட்டிற்கு வழங்குகின்றது.

- நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயலாற்றமானது பொதுவாக வலுவாகக் காணப்படுவதுடன் சில நடைமுறைப்படுத்தல்சார் இடர்நேர்வுகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. 2025இன் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கான செலவு-மீட்பு மின்சார விலையிடலினை மீட்டெடுத்தல் மற்றும் தன்னியக்க மின்சாரத் தீர்வைச் சீராக்கத்தினைத் தொழிற்படுத்தல் என்பன குறித்த முன்கூட்டிய நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டிருந்தன. செலவின நிலுவைகளின் இருப்பு நீங்கலாக 2025 மாச்சு இறுதிக்கான அனைத்து அளவுசார் இலக்குகளும் நிறைவுசெய்யப்பட்டிருந்தன. 2025 மே இறுதியளவில் நிலுவையிலிருந்த அனைத்துக் கட்டமைப்புசார் அளவுகோல்கள் ஒன்றில் நிறைவுசெய்யப்பட்டிருந்தன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. பெருமளவில் வலு விலைகளின் காரணத்தினால் 2025 இரண்டாம் காலாண்டுப் பணவீக்கமானது நாணயக் கொள்கை ஆலோசனை விதியின் தாழ்ந்தளவிலான வெளிப்புற வீச்சிற்குக் கீழாக குறைவடைந்தது. படுகடன் மறுசீரமைப்பானது ஏறத்தாழ நிறைவடைந்துவிட்டது.

- பொருளாதாரத் தோற்றப்பாடானது தொடர்ந்தும் நேர்மறையாகக் காணப்படுகின்றது. இருப்பினும், உலகளாவிய வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்ற தன்மைகள் இலங்கையின் பேரண்டப்பொருளாதார மற்றும் சமூக உறுதிப்பாட்டிற்குக் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. இவ்வதிர்வுகள் பொருண்மியமாகுமாயின், அவற்றின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் வரையறைகளினுள் கொள்கைப் பதிலிறுத்தல்களை உருவாக்குவதற்கும் அதிகாரிகள் அலுவலர்களுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றுவர்.

**வொஷிங்டன், டி.சி – 2025, யூலை 03**: 2025, யூலை 01இல் பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையானது 48-மாத விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான நான்காவது மீளாய்வினை நிறைவுசெய்து, சிஎஉ 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 350 மில்லியன்) தொகையினை வரைவுசெய்வதற்கு அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கின்றது. இதுவரையான காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பன்னாட்டு நாணய நிதிய ஆதரவினை சிஎஉ 1.27 பில்லியனிற்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர். 1.74 பில்லியன்) இது கொண்டுவருகின்றது.[1]

சிஎஉ 2.286 பில்லியன் (395 சதவீத ஒதுக்கீடு அல்லது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகையொன்றினைக் கொண்ட இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடானது நிறைவேற்றுச் சபையினால் 2023 மாச்சு 20 அன்று (ஊடக அறிக்கை இல. 23/79 இனைப் பார்வையிடவும்) ஒப்புதலளிக்கப்பட்டது. (i) இறை மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையினை மீட்டெடுக்கின்ற வேளையில் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாத்தல், (ii) விலை மற்றும் நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், (iii) வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புதல், (iv) ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் ஊழல் பாதிப்படையக்கூடிய தன்மைகளைக் குறைத்தல் மற்றும் (v) வளர்ச்சி சார்ந்த கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நிலைத்திருக்கக்கூடிய

[1] சிஎஉ புள்ளிவிபரங்கள், சபை ஒப்புதல் நாளன்று காணப்பட்ட சி.எ.உரிமையொன்றிற்கான ஐ.அ.டொலரின் சந்தை வீதத்தில் மாற்றப்படுகின்றன.

விதத்தில் மீட்டெடுப்பதற்கான இலங்கையின் முயற்சிகளிற்கு நிகழ்ச்சித்திட்டமானது ஆதரவளிக்கின்றது.

மத்திய அரசின் செலவின நிலுவைத் தொகை இருப்பின் உச்ச வரம்பு தொடர்பிலான இலங்கையினால் தற்செயலாக வழங்கப்பட்ட துல்லியமற்ற தரவுகள் குறித்து முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்தான அறிக்கையொன்றினை நிறைவேற்றுச் சபை மீளாய்வு செய்தது. வரவுசெலவு திட்டத்தின் குறிப்பிட்ட செயற்பாடுகளின் ஒதுக்கீடுகளின் விபரமான பகுப்பாய்வினூடாக இணங்காணப்பட்ட நிலுவைத் தொகை இருப்பினைக் குறைந்தளவிலான அறிக்கையிடலானது இணங்கியொழுகாத கொள்வனவுகள் மற்றும் உறுப்புரை VIII, பிரிவு 5இன் கீழான இலங்கையின் கடப்பாடுகளின் மீறுகையொன்றிற்கு வழிவகுத்தது. அதிகாரிகள், திருத்தப்பட்ட தரவுகளை வழங்குவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களுடன் திறந்த மற்றும் நெருக்கமான முறையில் பணியாற்றியதுடன் நிலுவைகளைத் தீர்த்தல் மற்றும் அறிக்கையிடலுடன் தொடர்புடைய பல சரிப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள், பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இசைந்து செல்லும் விதத்தில் அறிக்கையிடல் மற்றும் தரவு சரிபார்த்தல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றனர். இந்நடவடிக்கைகளின் அடிப்படையில், கடைபிடிக்காமையின் விலக்கல்களிற்கான அதிகாரிகளின் வேண்டுகோளிற்கு நிறைவேற்றுச் சபை ஒப்புதலளித்தது.

இவ்வாலோசனைக்குத் தயாரிக்கப்பட்ட அலுவலர் அறிக்கையின் வெளியீட்டிற்கு அதிகாரிகள் ஒப்புதலளித்துள்ளனர்.[2]

நிறைவேற்றுச் சபையின் கலந்துரையாடலைத் தொடர்ந்து, பிரதி முகாமைத்துவ இயக்குநர் மற்றும் பதில் தலைவருமான திரு. கென்ஜி ஒகமுரா, பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

‘‘சில நடைமுறைப்படுத்தல்சார் இடர்நேர்வுகள் தீர்க்கப்பட்டுவருவதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட ஏற்பாட்டின் கீழான இலங்கையின் செயலாற்றமானது பொதுவாக வலுவாகக் காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி வலுவடைதல், பணவீக்கம் தொடர்ந்து தாழ்ந்தளவில் காணப்படுதல், ஒதுக்குகள் திரட்டப்படுதல் மற்றும் அரசிறை மேம்படுதல் ஆகியவற்றுடன் சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன. படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது நிறைவடையும் தருவாயில் காணப்படுகின்றது. கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் அதிகரித்துள்ள போதிலும் பொருளாதாரத் தோற்றப்பாடானது நேர்மறையாகக் காணப்படுகின்றது. அதிர்வுகள் பொருண்மியமாகுமாயின், தாக்கத்தினை மதிப்பிடுவதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் வரையறைகளினுள் கொள்கைப் பதிலிறுத்தல்களை உருவாக்குவதற்கும் அதிகாரிகள் நிதியத்துடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். வலுவான நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தலானது இன்றியமையாததாகக் காணப்படும்.

‘‘இறை நீடித்துநிலைத்திருக்கின்றதன்மையினை மீட்டெடுப்பதற்கும் இறை இடைவெளியினை உருவாக்குவதற்கும் நிலையான அரசிறைத் திரட்சியானது இன்றியமையாதக் காணப்படுகின்றது. வரி விலக்குக்கான கட்டமைப்புக்களை வலுப்படுத்தல், வரி இணங்குவிப்பினை ஊக்குவித்தல் மற்றும் செயற்றிறன்மிக்க நிலுவை முகாமைத்துவத்தினை நிச்சயப்படுத்துவதற்குப் பொது நிதியியல் முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் ஆகியவை முக்கியமானவையாயுள்ளன. பாதிப்படையக்கூடியவர்களிற்கான சமூக ஆதரவின் உள்ளடக்கம் மற்றும் இலக்கிடல் என்பவற்றினை மேலும் மேம்படுத்துவதும் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. இறைக் கட்டமைப்பினுள் மூலதன செலவிடலின் சீரான நிறைவேற்றுகையானது நடுத்தர கால வளர்ச்சியினை ஊக்குவிப்பதில் துணைபுரியும். செலவு-மீட்பு மின்சார விலையிடலின் மீட்டெடுப்பு மற்றும் தன்னியக்க மின்சாரத் தீர்வைச் சீராக்கத்தின் தொழிற்படுத்துகை என்பன பாராட்டத்தக்கதாயுள்ளதுடன் இறை இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பேணப்பட வேண்டும்.

---

[2] பன்னாட்டு நாணய நிதியத்தின் உடன்படிக்கை வாசகங்களின் கீழ், உறுப்பு நாடுகளுடன் தொடர்புடைய ஆவணங்களை வெளியிடுவதானது தன்னார்வமானதென்பதுடன், இது உறுப்பினரின் சம்மதத்தினைத் தேவைப்படுத்துகின்றது. அலுவலர் அறிக்கையானது www.imf.org/srilanka எனும் பக்கத்தில் விரைவில் வெளியிடப்படும்.

“இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பினை மேம்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமானது குறிப்பிடத்தக்கதொன்றாகும். எஞ்சியுள்ள அலுவல்சார் மற்றும் வர்த்தகக் கடன்கொடுநர்களுடனான இருபுடை உடன்படிக்கைகளின் காலந்தவறாத இறுதிப்படுத்துகையானது முன்னுரிமையளிக்கத்தக்கதொன்றாகக் காணப்படுகின்றது.

“நாணய நிதியளித்தலினை நீக்குதல் மற்றும் மத்திய வங்கியின் சுயாதீனத்தினைப் பாதுகாத்தல் என்பவற்றிற்கான நிலையான அர்ப்பணிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, நாணயக் கொள்கையானது விலை உறுதிப்பாட்டிற்குத் தொடர்ந்து முன்னுரிமையளிக்க வேண்டும். சிறந்த செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை மற்றும் நிர்வாக ரீதியிலான சென்மதி நிலுவைசார் வழிமுறைகளைப் படிப்படியாக நீக்குதல் என்பன வெளிநாட்டுத் துறைத் தாங்கியிருப்புக்கள் மற்றும் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மை என்பவற்றினை மீள்கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாதனவாயுள்ளன.

“செயற்படாக் கடன்களைத் தீர்த்தல், அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் ஆளுகை மற்றும் மேற்பார்வை என்பவற்றினை வலுப்படுத்தல் மற்றும் கடன் தீர்க்கவகையற்ற நிலைமை மற்றும் தீர்மானக் கட்டமைப்புகளினை மேம்படுத்தல் என்பன கொடுகடன் வளர்ச்சிக்குப் புத்துயிரளிப்பதற்கும் தனியார் துறை அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் முக்கியமானதாகக் காணப்படுகின்றன.

“இலங்கையின் ஆற்றல்வாய்ந்ததன்மையினை வெளிக்கொணர்வதற்குக் கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் இன்றியமையாதனவாயுள்ளன. ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் பன்முகப்படுத்தல் என்பவற்றினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கமானது ஆளுகைச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுடன் வர்த்தக வசதிசார் சீர்திருத்தங்களை மேம்படுத்த வேண்டும்.”

நிறைவேற்றுச் சபையின் கலந்துரையாடலைத் தொடர்ந்து, பிரதி முகாமைத்துவ இயக்குநர் மற்றும் பதில் தலைவருமான திரு. கென்ஜி ஓகமுரா, பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

“பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான 2023 விரிவாக்கப்பட்ட ஏற்பாட்டின் கீழ் இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட இணங்கியொழுகாத கொள்வனவுகள் மற்றும் உறுப்புரை VIII, பிரிவு 5இன் கீழான கடப்பாடுகளின் மீறுகை என்பன குறித்து மீளாய்வு செய்தது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மீளாய்வுகளில் செலவின இருப்புக்கள் குறித்த அதிகாரிகளின் மூலமான துல்லியமற்ற தகவல்களின் வழங்குகையின் விளைவொன்றாக இணங்கியொழுகாத கொள்வனவுகள் தோற்றம்பெற்றன.

“பன்னாட்டு நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களில் உள்ள துல்லியமற்ற தன்மைகள் தற்செயலாகக் காணப்பட்டதுடன் அறிக்கையிடும் அமைச்சுக்களின் மூலமான நிதி அமைச்சிற்கான நிலுவைத் தொகைகளின் காலந்தவறாத அறிக்கையிடலில் உள்ள பலவீனங்கள் மற்றும் தொழில்நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான “நிலுவைகள்” என்ற வரைவிலக்கணம் குறித்து அதிகாரிகளின் தவறானதொரு புரிதல் என்பவற்றின் காரணமாகத் தோற்றம்பெற்றன.

“முன்னோக்கிச் செல்கையில் நிலுவைத் தொகைகளைத் திரட்டுதல் அல்லது தகவல்களின் துல்லியமற்ற அறிக்கையிடல் குறித்த இடர்நேர்வினைக் குறைக்கும் பொருட்டு அதிகாரிகளின் சீராக்க நடவடிக்கைகள், நிலுவைத் தொகைகளின் மீள்கொடுப்பனவுகள், தற்போதுள்ள இறைக் கட்டமைப்பினுள் வசதியளிக்கப்படுமென்ற விடயம் மற்றும் புதிய பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்திற்கமைய பொது நிதியியல் முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான அதிகாரிகளின் அர்ப்பணிப்பு என்பவற்றினை நிறைவேற்றுச் சபையானது சாதகமாகக் கருத்திற்கொண்டது. மேற்கூறியவற்றினைக் கருத்திற்கொண்டு, இணங்கியொழுகாத கொள்வனவுகளிற்கு வழிவகுத்த அளவுசார் செயலாற்றப் பிரமாணத்தின் கடைபிடிக்காமைகளிற்கான விலக்கல்களினை வழங்குவதற்கு நிறைவேற்றுச் சபையானது உடன்பட்டதுடன் உறுப்புரை VIII, பிரிவு 5இன் கீழான கடப்பாடுகளின் மீறுகை தொடர்பாக மேலும் நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையில்லையெனத் தீர்மானித்தது.”

## இலங்கை: தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகள் 2024-2027

| | 2024 | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|---|
| | எறிவு | எறிவுகள் | | |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பணவீக்கம்** (சதவீதத்தில்) | | | | |
| உண்மை மொ.உ.உற்பத்தி | 5.0 | 3.5 | 3.1 | 3.1 |
| பணவீக்கம் (சராசரி) 1/ | 1.2 | 3.3 | 5.2 | 5.0 |
| பணவீக்கம் (கால முடிவில்) 1/ | -1.5 | 8.9 | 5.2 | 5.0 |
| மொ.உ.உற்பத்தி சுருக்கி வளர்ச்சி | 3.8 | 3.6 | 5.3 | 5.1 |
| பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | 9.0 | 7.1 | 8.5 | 8.4 |
| **சேமிப்புக்கள் மற்றும் முதலீடு** (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | | | | |
| தேசிய சேமிப்புக்கள் | 25.2 | 21.8 | 22.2 | 22.9 |
| அரசு | -3.2 | -2.0 | -0.8 | -0.1 |
| தனியார் | 28.4 | 23.8 | 23.0 | 23.0 |
| தேசிய முதலீடு | 27.0 | 21.8 | 22.1 | 22.5 |
| அரசு | 5.0 | 4.3 | 4.5 | 4.6 |
| தனியார் | 21.9 | 17.4 | 17.6 | 17.9 |
| சேமிப்புக்கள் - முதலீட்டு மீதி | -1.8 | 0.0 | 0.1 | 0.4 |
| அரசு | -8.2 | -6.3 | -5.3 | -4.6 |
| தனியார் | 6.4 | 6.4 | 5.4 | 5.1 |
| **அரச நிதி** (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | 13.7 | 15.0 | 15.2 | 15.3 |
| செலவினம் | 19.3 | 20.5 | 19.7 | 19.2 |
| ஆரம்ப மீதி | 2.2 | 2.3 | 2.3 | 2.3 |
| மத்திய அரச மீதி | -5.6 | -5.4 | -4.5 | -3.9 |
| மத்திய அரச மொத்த நிதியிடல் தேவைகள் | 21.9 | 22.6 | 19.6 | 14.9 |
| மத்திய அரச படுகடன் | 100.5 | 105.1 | 103.4 | 100.2 |
| பொதுப் படுகடன் 2/ | 105.2 | 109.6 | 107.4 | 103.6 |
| **பணம் மற்றும் கொடுகடன்** (சதவீத மாற்றம், காலப்பகுதியின் நிறைவு) | | | | |
| ஒதுக்குப் பணம் | 15.8 | 6.5 | 8.5 | 8.4 |
| விரிந்த பணம் | 8.6 | 6.5 | 8.5 | 8.4 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 4.0 | 4.5 | 3.0 | 3.8 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 10.7 | 9.4 | 9.2 | 9.3 |
| தனியார் துறைக்கான கொடுகடன் (பணவீக்கத்திற்காகச் சீராக்கப்பட்டது) | 9.5 | 6.1 | 4.1 | 4.3 |
| மத்திய அரசாங்கத்திற்கும் அரச கூட்டுத்தாபனங்களுக்குமான கொடுகடன் | -1.4 | 0.0 | -3.3 | -2.5 |
| **சென்மதி நிலுவை** (ஐ.அ.டொலர் மில்லியன்களில்) | | | | |
| ஏற்றுமதிகள் | 12,772 | 12,880 | 13,490 | 14,194 |
| இறக்குமதிகள் | -18,828 | -21,363 | -22,447 | -23,578 |
| நடைமுறைக் கணக்கு மீதி | 1,746 | -48 | -77 | -439 |
| நடைமுறைக் கணக்கு மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில்) | 1.8 | 0.0 | -0.1 | -0.4 |
| நடைமுறைக் கணக்கு மீதி வட்டி நீங்கலாக (மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில் | 3.7 | 2.1 | 2.0 | 1.7 |
| ஏற்றுமதிப் பெறுமதியின் வளர்ச்சி (சதவீதம்) | 7.2 | 0.8 | 4.7 | 5.2 |
| இறக்குமதிப் பெறுமதியின் வளர்ச்சி (சதவீதம்) | 12.0 | 13.5 | 5.1 | 5.0 |
| **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** (காலப்பகுதியின் முடிவில்) | | | | |
| ஐ.அ.டொலர் மில்லியன்களில் | 6,122 | 7,255 | 9,273 | 12,974 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற இறக்குமதிகளின் மாதங்களில் | 3.0 | 3.3 | 4.0 | 5.4 |
| ஒதுக்குப் போதுமாந்தன்மையினை அளவிடுகின்ற (ARA) கலப்பு அளவீட்டின் சதவீதத்தில் | 50.5 | 60.3 | 75.5 | 100.0 |
| **பயன்படுத்தக்கூடிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** (காலப்பகுதியின் நிறைவு) 3/ | | | | |
| ஐ.அ.டொலர் மில்லியன்களில் | 4,686 | 7,255 | 9,273 | 12,974 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற இறக்குமதிகளின் மாதங்களில் | 2.3 | 3.3 | 4.0 | 5.4 |
| ஒதுக்குப் போதுமாந்தன்மையினை அளவிடுகின்ற (ARA) கலப்பு அளவீட்டின் சதவீதத்தில் | 38.6 | 60.3 | 75.5 | 100.0 |
| **வெளிநாட்டுப் படுகடன்** (அரச மற்றும் தனியார்) | | | | |
| ஐ.அ.டொலர் பில்லியன்களில் | 53.9 | 54.6 | 56.3 | 59.9 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | 54.4 | 55.1 | 58.6 | 59.4 |
| **ஞாபகார்த்த விடயங்கள்:** | | | | |
| பெயரளவு மொ.உ.உற்பத்தி (ரூபா பில்லியன்களில்) | 29,899 | 32,036 | 34,754 | 37,664 |
| செலாவணி வீதம் (சராசரி காலப்பகுதி) | 302.0 | … | … | … |
| செலாவணி வீதம் (காலப்பகுதியின் முடிவில்) | 293.0 | … | … | … |

மூலங்கள்: இலங்கை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் மதிப்பீடுகள்.

1/ கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

2/ மத்திய அரச படுகடன், பொதுவாக உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (அதாவது, வெளிநின்ற நிதியக் கொடுகடன் மற்றும் பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாடுகள்) என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. படுகடன் புள்ளிவிபரங்கள் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு 2023இன் இறுதியில் நிறைவடைந்துள்ளதாக தற்போது கருதுகின்றன.

3/ முன்னைய ஆண்டின் இறக்குமதி உள்ளடக்கத்தின் 3 மாதங்களுக்கு மேலாக மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் உயர்வடைந்தவுடன் பயன்படுத்தக்கூடியதாக மாறும் சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி (2022இல் ஐ.அ.டொலர் 1.4 பில்லியன்) நீங்கலாக.